சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி கிழக்கு பகுதி சென்னை பெருநகராட்சி 180 வது வார்டில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் மா சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – ஜே.எம்.எச். அசன் மௌலானா எம்.எல்.ஏ. மண்டல குழு தலைவர் இரா. துரைராஜ், வேளச்சேரி கிழக்கு பகுதி கழக செயலாளர் துரை கபிலன், வட்ட கழக செயலாளர்கள் க. கணேஷ் குமார், வி.எம்.டி. ராஜா ரமணன் ஆகியோர் 'உங்களுடன் ஸ்டாலின் முகாம்' திருவான்மியூர் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள மருந்தீஸ்வரர் திருக்கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. 180 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி விசாலாட்சி கபிலன் ஏற்பாட்டில் பொது மக்களுக்கு காலை உணவு குடிநீர் தேனீர் மற்றும் மதிய உணவு கழக நிர்வாகிகள் வழங்கி பொது மக்களின் குறைகளை கேட்டுறிந்து அந்தந்த துறை அதிகாரிகளிடம் அழைத்துச் சென்று மனு அளிக்க உதவி செய்தனர்.

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!

நாமக்கல், செப். 6 -

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற் குழுக் கூட்டம் வரும் 08.09.2025 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு திருச் செங்கோட்டில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் இறால் நடன சபாபதி தலைமையில் நடைபெற உள்ளது.

அது சமயம் இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

கழக முப்பெரும் விழா குறித்து,

கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து .

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று (05.09.2025) மேயர் திருமதி ஆர்.பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்தில் தூய்மைப் பணியின் போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியினை காவல் நிலையத்தில் ஒப்படைத்த தூய்மைப் பணியாளர் திருமதி கிளாராவை மேயர் அலுவலகத்திற்கு நேரில் அழைத்து சால்வை அணிவித்து, மாநகராட்சியின் சார்பில்ரூபாய் 10 ஆயிரம் ரொக்கப் பரிசினை வழங்கிப் பாராட்டினார், இந்நிகழ்வின் போது, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசீலன், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. தலைமையில் – சென்னை தெற்கு மாவட்டம்

வேளச்சேரி மேற்குப் பகுதி செயல்வீரர்கள் கூட்டம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – ச.அரவிந்த் ரமேஷ் – காரம்பாக்கம் கணபதி – பிரபாகரராஜா – மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, செப். 6 -

சென்னை தெற்கு மாவட்டம் - வேளச்சேரி மேற்குப் பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் நாளை (7.9.2025 -ஞாயிறு) நடைபெறுகிறது என பகுதிப் பொறுப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி. அறிவித்துள்ளார். இது குறித்து விவரம் வருமாறு:-

வேளச்சேரி மேற்குப் பகுதிப் பகுதி பொறுப்பாளர்கள் கூட்டம் நாளை 7.9.2025 ஞாயிறு காலை 9 மணிக்கு 100அடி சாலை, முருகன் திருமண மண்டபத்தில் பகுதிப் பொறுப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி. தலைமையில் நடைபெறுகிறது.

வேளச்சேரி பெ.மணிமாறன் எம்.சி., வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி., மகேஸ்வரி முருகவேல் எம்.சி. கழக த.ரமேஷ், வழக்கறிஞர் த.ஜெகதீசன், சி.பழனி, எம்.ஏ.சங்கர், கே.மைதிலி, ந.டில்லிகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர் .

வட்டச் செயலாளர்கள் பொ.த.மதிவாணன், த.பார்த்திபன், கே.என். தாமோதரன், தே.கோபி, எஸ்.முருகவேல், ஜி.பி.எஸ். பாலசதீஷ், க.பாரதிதாசன், வி.சக்திவேல் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த்ர மேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி. பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பாலவாக்கம் க.சோமு, க. தனசேகரன், காசிமுத்துமாணிக்கம், எஸ்.அருணாச்சலம், எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வ நாதன், பாலவாக்கம் மு.மனோகரன், பா. வாசுகிபாண்டியன், பா.சாய் ஜெயகாந்தன், எஸ்.பத்மபிரியா, எஸ். தியாக ராஜன், பகுதிச் செயலாளர்கள் துரை கபிலன், இரா.துரைராஜ் , எம்.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.வி. ரவிச்சந்திரன், நொளம்பூர் வே. ராஜன், வி.இ.மதியழகன், கே.கண்ணன், மு. ராஜா, துரை வீரமணி, ஜி.வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் ரா.பாலசுந்தரம், அடையார் பாஸ்கர், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், M.K.ஏழுமலை, மேடவாக்கம் ரவி, அ.அரிகிருஷ்ணன், ரத்னா லோகேஸ்வரன், இராமாபுரம் செல்வகுமார், மின்னல் கந்தப்பன், பி.எஸ்.முருகேசன், த.பஷீர், வீர.கனிமொழி, இளைஞர் அணி விநாயகமூர்த்தி, ஆர். கிருஷ்ணகுமார், எஸ்.சங்கர் கணேஷ், பாண்டியன், கா. வீ.தியாகராஜன், கோட்டூர் பிரகாஷ், ராமாபுரம் செ. ரவி, வசதை சாதிக், நா. மணிகண்டன், சி.பரிமேலழகன், பா.அருண்குமார், எம். பார்த்திபன், சி.சுரேஷ், அஞ்சல் என்.ராமன், ராமாபுரம் வி.ராஜேஷ், கோ. பாஸ்கர், என்.எஸ்.ஹரி பாபு, எஸ்.முக்கே ஷ்கண்ணன் , கே.குமரேசன், எஸ். பி.அருள், ராமாபுரம் அ. விஜயபாலா, எஸ்.மணி, ஆர்.சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா சையத், சுந்தரம் உள்ளிட்ட மாவட்டப் பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

பொ.த.எழில்வாணன் நன்றி கூறுகிறார்.

எஸ்.கனிமொழி தனசேகரன் தலைமை! கே.கண்ணன் – மு.இராசா முன்னிலை!

சென்னை தெற்கு மாவட்ட மகளிரணி சார்பில் 4000 பேருக்கு நலஉதவிகள்!

கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்குகிறார்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

சென்னை, செப்.6-

சென்னை தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் எஸ்.கனிமொழி தனசேகரன் தலைமையில் இன்று (06.09.2025 - சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு எம்.ஜி.ஆர் நகர் மார்க்கெட் அருகில் முப்பெரும் விழாவை முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் 4,000 நபர்களுக்கு நலத்திட்டம் வழங்கும் விழா நடைபெறுகிறது.

கலைஞர் நகர் தெற்கு பகுதி செயலாளர் கே.கண்ணன், கலைஞர் நகர் வடக்கு பகுதி செயலாளர் மு.இராசா, பொதுக்குழு உறுப்பினர்கள் துரைராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ். டி.தங்கராசன், சோ.செந்தில்குமார் முன்னிலையில்

மாவட்ட துணைச் செயலாளர் பா.வாசுகி பாண்டியன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் நிஷாசையத், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் ஜி.லட்சுமி, இ.ஜாஸ்மின் லில்லி, எம்.பூங்குழலி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.விஜய லட்சுமி, பி.மேகலா, ப.விஜய லட்சுமி, வரவேற்புரையில்

நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்ற வருகை தரும்

கழக துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி எம்.பி., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், தலை வர்

நிலைக்குழு கணக்கு மற்றும் தணிக்கை பெருநகர சென்னை மாநகராட்சி தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ., மாநில வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம், விருகம்பாக்கம் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் வே.உமாகாந்த், மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் அணி இணைச் செயலாளர் விஜயா தாயன்பன் மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ராணி, மகளிர் தொண்டர் அணி இணைச் செயலாளர் குமாரி விஜயகுமார்,

மாநில சமூக வலைதள பொறுப்பாளர்கள் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., ராணி ரவிச்சந்திரன், சமூக வலைதள பொறுப்பாளர் மருத்துவர் பா.மீ.யாழினி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ஆர்.சசிகுமார், 136வது வார்டு மாமன்ற உறுப்பினர் நிலவரசி துரைராஜ், மகளிர் அணி மாவட்ட தலைவர் சி. சமீனா செல்வம், மகளிர் அணி மாவட்ட துணைத் தலைவர் பா.வளர்மதி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் : விசாலாட்சி கபிலன், வி.செல்வி, புவனேஸ்வரி, ஏ.சுந்தரி ஆதிகேசவன்,வி.திலகவதி, லதாசங்கர், பா.லட்சுமி, சரசுவதி அண்ணாமலை, ஜெ,கலைச்செல்வி, எம்.மஞ்சுளா ஏ.பிரபாவதி, டி.சுகன்யா தனசேகரன், கே.ஸ்டெல்லா மேரி, மேகலா ஜெயபால்

கலைஞர் நகர் தெற்கு பகுதி நிர்வாகிகள் : எஸ். உமாபதி, எஸ்.ரவி, பெ. தியாகு, அ.பாபு கலைஞர் நகர் வடக்கு பகுதி நிர்வாகிகள் : எஸ். விஜயகுமார், சா. நாகராசன், து.ரஞ்சித்குமார் கலைஞர் நகர் தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் : பி.கே.குமார், கே.சதீஷ் கண்ணன், அ.கதிரேசன் ஆர்.பழனிச்சாமி, இரா. செழியன், ஜம்பு முருகன் கலைஞர் நகர் வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் : பொன்.வர.லோகு, எஸ். மைக்கேல், மு.கோவிந்தராசன் வி.ஏ.ராஜா, எஸ். பாஸ்கரன், தஞ்சை ஆர். பாபு

மாவட்ட பிரதிநிதிகள் : த.முத்துமாரியப்பன், சி.நந்தகோபால், கே.ரவிக்கு மார் மாவட்ட துணை அமைப்பாளர்கள் : ஆர்.ராம் மூர்த்தி, கே.வி.எஸ். சுரேஷ், என்.மாதவன், என்.எம். முகமதுரியாஸ் கலைஞர் நகர் தெற்கு பகுதி மகளிர் அணி நிர்வாசிகள் : அபிபா பேகம், ஆர்.செல்வி, எஸ். தனம், ஆர்.குணா, எம்.சசிகலா, யூ.ஸ்ரீலதா டி.ருக்மணி, கே.ராணி, எஸ்.உத்திரகுமாரி, பி.அமுதா, இ. உமாலட்சுமி, மேனகா

கலைஞர் நகர் வடக்கு பகுதி மகளிர் அணி நிர்வாகிகள் : ஆர்.குளோரி ரமேஷ், வி.நீலாவதி, எம். சூர்யகலா, ஆர்.சாந்தி, வி. சாமுண்டீஸ்வரி எஸ்.திலகவதி, வி.ஏ. சசிரேகா, வி. மோனிகா, எம்.மீனா

நன்றியுரை : பட்டம் மாள், எஸ்.லதா, எஸ். சுகந்தி, ஆர்.சரோஜா

நிகழ்ச்சி ஏற்பாடு சென்னை தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் எஸ்.கனிமொழி தனசேகரன்

அடையாறு மண்டலத்தில் தூய்மைப் பணியின்போது கண்டெடுத்த

தங்கச் சங்கிலியை காவல் நிலையத்தில் ஒப்படைத்த தூய்மைப் பணியாளர் கிளாரா!

மேயர் பிரியா சால்வை அணிவித்து ரூ.10 ஆயிரம் பரிசு வழங்கி பாராட்டினார்!

சென்னை, செப்.6-

அடையாறு மண்டலத்தில் தூய்மைப் பணியின் போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியினை காவல் நிலையத்தில் ஒப்படைத்த தூய்மைப் பணியாளர் திருமதி கிளாரா அவர்களை மேயர் திருமதி ஆர்.பிரியா மாநகராட்சியின் சார்பில் சால்வை அணிவித்து ரூபாய் 10 ஆயிரம் ரொக்கப் பரிசினை வழங்கிப் பாராட்டினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்தில் (மண்டலம்13), இ.சி.ஆர் பிரதான சாலையில், மருதீஸ்வரர் கோவில் எதிரே, நேற்று (04.09.2025) தூய்மைப் பணியின் போது தங்கச் சங்கிலியை கண்டெடுத்த திருமதி கிளாரா அதனை உடனடியாக திருவான்மியூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

இதனையறிந்த தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள், தூய்மைப் பணியாளர் திருமதி கிளாராவின் நேர்மையான இச்செயலினைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தார். மேலும், தமிழ் நாடு துணை முதலமைச்சர் அவர்கள், தூய்மைப் பணியாளர் திருமதி கிளாராவை தனது முகாம் அலுவலகத்திற்கு நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்து, வெகுமதி வழங்கிப் பாராட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இன்று (05.09.2025) மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா, நேர்மையாகச் செயல்பட்ட தூய்மைப் பணியாளர் திருமதி கிளாரா அவர்களை, ரிப்பன் கட்டடத்தில் உள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் அலுவலகத்திற்கு நேரில் அழைத்து சால்வை அணிவித்து, மாநகராட்சியின் சார்பில் ரூபாய் 10 ஆயிரம் ரொக்கப் பரிசினை வழங்கிப் பாராட்டினார்.

இந்நிகழ்வின் போது, மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், மற்றும் திடக்கழிவு மேலாண்மை கண்காணிப்புப் பொறியாளர் ஏ.எஸ். முருகன், செயற்பொறியாளர் ப. விஜய் அரவிந்த் ஆகியோர் உடனிருந்தனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்!

குன்றத்தூர் நகரக் கழக அவசரச் செயற்குழுக் கூட்டம்!

நகரச் செயலாளர் கோ. சத்தியமூர்த்தி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப்.6

குன்றத்தூர் நகர தி.மு.க. செயலாளர் கோ.சத்தியமூர்த்தி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

குன்றத்தூர் நகர தி.மு.க. அவசரச் செயற்குழுக் கூட்டம் இன்று (6.8.2025 சனிக் கிழமை) மாலை 5 மணி அளவில் குன்றத்தூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஹோட்டல் பாலாஜி பவன் மாடியில் அவைத் தலைவர் எம். சங்கர் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் குரு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

கூட்டத்தில் நகர கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள் ஆர்.கே. அபிபூநிஷா, தா. கந்தசாமி, டி.கே. அருள்மொழி, லயன் என்.குணசேகரன், கா.வே. சிதம்பரம், ஜே. மணிமாறன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே இக்கூட்டத்தில் நகரக் கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், வார்டு கழக செயலாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக கழக உறுப்பினர்கள், முன்னோடிகள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: வருகின்ற 8.9.2025 அன்று முதல்வர் கழகத் தலைவர் அவர்களுக்கு விமான நிலையம் அருகில் வரவேற்பு,

வருகின்ற 10.09.2025 அன்று செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்பு,

குன்றத்தூரில் அம்பேத்கர் சிலை திறப்பு,

முப்பெரும் விழா பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்தநாள் விழா, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சர்வபள்ளி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருத்தணியில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் ராதாகிருஷ்ணன் திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நகரக் கழகச் செயலாளர் வினோத்குமார் திருத்தணி வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் ஏ.எல்.விஜயகுமார், தி.க.மாவட்ட செயலாளர் ரமேஷ் நிர்வாகிகள் ஜி.எஸ்.கணேசன், முரளி சேனா, எஸ்.குமரன், எஸ்.பன்னீர் செல்வம், சின்னா, குத்தூஸ்ரகுமான், ரஹீம் உள்ளனர்.

இராயபுரம் — திரு.வி.க. நகர் மண்டலங்களில்

47 நாட்களில் 50,490 மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றம்!

சென்னை,செப்.6-

பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலைகள், தெருக்கள், கடற்கரைகள், பேருந்து நிறுத்தங்கள், பாலங்கள், பூங்காக்கள், மயான பூமிகள், பொது இடங்கள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் தினசரி சராசரியாக 6300 மெட்ரிக் டன் குப்பைகளை அகற்றி திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன

இதில், இராயபுரம் மண்டலம் (மண்டலம்5) திரு. வி.க நகர் மண்டலம் (மண்டலம்6) ஆகிய இரண்டு மண்டலங்களில் அனைத்துப் பகுதிகளிலும் கடந்த 19.07.2025 முதல் 03.09.2025 வரையிலான 47 நாட்களில் மண்டலம்5ல் 29,425. 21 மெட்ரிக் டன், மண்டலம்6ல் 21,065. 04 என மொத்தம் 50,490. 25 மெட்ரிக் டன் குப்பைகளை அகற்றி கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

மண்டலம்5 மற்றும் மண்டலம்6ல் வீடு வீடாகச் சென்று குப்பைகளை சேகரிக்கும் பணிக்காக 483 மின்கல வாகனங்கள், குப்பைகள் சேகரிப்பதற்காக 16 எண்ணிக்கையில் 5 டன் கொள்ளளவில் 16 டிப்பர் லாரிகள், 8 கன மீட்டர் கொள்ளளவில் 40 காம்பாக்டர் வாகனங்கள், 14 கன மீட்டர் கொள்ளளவில்

34 காம்பாக்டர் வாகனங்கள், 18 கன மீட்டர் கொள்ளளவில் 6 காம்பாக்டர் வாகனங்கள், 203 டாட்டா ஏஸ் வாகனங்கள், 12 கனரக வாகனங்கள், 6 ஜேசிபி இயந்திரங்கள் என மொத்தம் 800 வாகனங்கள் பயன்படுத்தப் பட்டு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த இரண்டு மண்டலங்களிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை சுழற்சி முறையில் கண்காணித்திட உரிய அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவர்களது கண்காணிப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக இந்த இரண்டு மண்டலங்களிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்பட்டு மக்களுடைய சுகாதாரத்தை பேணும் நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை மேற்கு மாவட்ட பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ச. அசோக்குமார் இல்லத் திருமண வரவேற்பு விழா 03.09.2025 அன்று நடைபெற்றது. இதில்மணமக்கள் அண்ணாநகர் தெற்குப் பகுதி பொறியாளர் அணி பகுதி அமைப்பாளர் ஆர். பிரவீன்குமார் – ஏ.நந்தினி ஆகியோரை மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., பகுதி செயலாளர்கள் நா. இராமலிங்கம் எம்.சி., ச.பரமசிவம் உள்ளிட்ட மாவட்ட கழக, பகுதி, வட்ட நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.